பின் தங்கிய நிலைமைகள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து, எதைச் செய்தால் நல்லது என்று கருதுகிறோமோ அதை முறைப்படி, மிக மோசமான நிலைமையில் இருப்பதை முதலில் எடுத்துக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண் 846—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பெரிய தாலுக்காவான செங்கல்பட்டு தாலுக்காவை பிரித்தமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆமெனில் எந்தெந்த பிர்க்காக்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

ரத்தனகிரி பாலமுருகன் கோயில்

* வினா எண் 847—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூருக்கு அருகாமையில் உள்ள ரத்தனகிரி பாலமுருகன் கோயிலில் பிப்ரவரி மாதம் வெள்ளோட்டம் விடப்பட்ட தங்கத்தேருக்கு அரசு ஏதேனும் நிதி உதவியளித்துள்ளதா ?

(ஆ) அங்கு கட்டப்பட்டுள்ள குளத்திற்கு நிதி உதவி ஏதும் அளிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : (அ) & (ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.